1973 நவம்பர் 19]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பல்லடம் வட்டத்தில் புதிய கிணறுகள் தோண்டுவதற்கு போதிய நிலநீர் இல்லை யென்று நிலநீர் இயக்குநர் தற்சமயம் கருதுகிறார். இருப்பினும், மேற்கொண்டு நிலநீர் அளவை நிர்ணயிக்க விரிவாகப் பரிசிலனை நடத்த முயற்சிகள் நடக்கின்றன. அதுவரை மேற்படி வட்டத்தில் புதிய கிணறுகள் தோண்ட நிலவள வங்கிகளிலிருந்து கடன் கொடுக்க இயலாத நிலை இருந்து வருகிறது.

திரு. சு. துரைசாமி: பல்லடம் வட்டத்தில் பொங்கலூர், சுல்தான்பேட்டை ஒன்றியப் பகுதிகளில் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட வாய்க்கால்கள் இருக்கின்றன. நொய்யல் ஆற்றின் இடையில் பல்வேறு அணைகள் இருப்பதால் ஆங்காங்கு புதுக் கிணறுகள் வெட்டினால் தண்ணீர் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே அரசாங்கம் அதைக் கணக்கிலெடுத்து பல்லடம் வட்டத்தில் புதுக் கிணறுகள் வெட்ட விவசாயிகளை ஊக்கப்படுத்த கடன் கொடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இப்போது 50 கிணறுகள் புதிதாக வெட்ட ஒரு திட்டத்தை அனுமதித்திருக்கிறது. அஃதன்றி பழைய கிணறுகள் 22-க்கான ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், தமிழ் நாட்டிலுள்ள மொத்த மோட்டார்களில் 18 சதவிகிதம் மோட்டார் அங்கு ஓடுகிற காரணத்தால் தண்ணீர் முன் இருந்ததைவிட இப்போது 45 அடி கீழே இறங்கிக் கொண்டு வருகிறது. ஆகவே அதுபற்றிய ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. புதிதாக நண்பர் அவர்கள் சொல்கிறபடி அந்தத் திட்டம் வந்தால், அதுபற்றியும் பரிசிலிக்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Lift Irrigation Societies.

* 187 *Q.*—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) the number of "Small Farmers' Lift Irrigation Societies" functioning in Tamil Nadu as on this date; and

(*b*) the total amount of loan advanced so far?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) தமிழ்நாட்டில் 30—6—1973 முடிய, 2094 சிறு விவசாயிகள் இறைவைப் பாசனச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

(இ) அவைகளுக்கு 30—6—1973 முடிய, நிலவள வங்கிகள் மூலமாக வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 53,23,672.